ஓவர்டைம் பணியை நாம் செய்ய வேண்டியதில்லை. ஏஜன்சி தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியதில்லை. ஆனால் முக்கியமாக நாம் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். நமது வலிமை நமது கூட்டு முயற்சியில் தான் உள்ளது. இந்த தொழிற்சாலையை நடத்த பக்காவோருக்கு நாம் தேவை. நாம் ஒன்றாக செயல்பட்டால் அவர்களை நமது ஊதியத்தை உயர்த்த வைக்க முடியும்.

## மற்ற செய்திகள்

### ஜிஎம்பி தேர்தல்

புதிய தொழிற்சங்க பிரதிநிதிகளை தேர்வு செய்வதற்கு தேர்தல் நடத்த உள்ளதாக ஜிஎம்பி தொழிற்சங்கம் சமீபத்தில் உறுப்பினர்கள் கடிதம் எழுதியது. தொழிற்சங்கத்தை கண்டு நாம் எல்லோரும் விரக்தி அடைந்துள்ளோம் - ஆனால் நமக்கு ஆதரவு கொடுப்பதற்கும் நிர்வாகத்தை எதிர்ப்பதற்கும் நமக்கு நல்ல பிரதிநிகள் தேவை. நிர்வாகத்திற்கு துணை போகும் பிரதிநிதிகளை நாம் தேர்ந்தெடுக்கக் கூடாது. உங்களுக்கு தெரிந்தவர் யாராவது நன்றாக போராடும் மனப்பான்மையுடன் இருந்தால், அவரை தேர்தலுக்கு நியமனம் செய்யுங்கள்!

### கம்பர்லாண்டில் ஷிப்ட் மாறுகிறது

கம்பர்லாண்ட் தொழிற்சாலையில் பாக்கிங் மற்றும் சில துறைகளில் ஷிப்ட் மாற்றம் செய்யப்பட்டுள்ளது சில தொழிலாளர்களை பாதித்துள்ளது. பாக்கிங்கில் பணி புரியும் சில தொழிலாளர்களுக்கு இந்த மாற்றம் ஒத்துப்போகிறது(குறிப்பாக அவர்களுக்கு ஞாயிறு விடுமுறை கிடைக்கும் என்றால்), ஆனால் மற்றவர்களுக்கு இந்த மாற்றம் ஒத்துப்போகவில்லை. அவர்கள் புது ஆட்களுடனும் பணிபுரிய வேண்டியுள்ளது. இதனால் பணி கடினமாகி உள்ளது. நமது தனிமனித வாழ்வை குறித்தும் இம்மாற்றங்களால் நமது குடும்ப வாழ்வும் பாதிக்கப்படுகிறது என்பதை பற்றி; நிர்வாகத்திற்கு கவலையில்லை. அவர்களும் உற்பத்தி அதிகரிக்க வேண்டும், லாபம் அதிகரிக்க வேண்டும். அதனால் நம் பணியிட உறவுகள் போனால் அவர்களுக்கு கவலை இல்லை.

### பத்திரிக்கையாளர்களுடன் தொழிலாளர்கள் பேசக்கூடாது என எல்விடன் மேலாளர் எச்சரிக்கை

தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே 'உரையாடலை' பலப்படுத்துவதற்கு எல்விடனின் புதிய மேலாளர் மாதாந்திர கூட்டத்தை ஆரம்பித்துள்ளார்(உண்மையில் அரை மணி நேரத்திற்கும் அவர்கள் மட்டும் தான் பேசுகின்றனர்). ஆனால் உங்களுக்கு தெரியுமா? எல்விடனின் உருளைகள் கராறாகத் தான் உள்ளன! அனைத்து தொழிலாளர்களும் பத்திரிக்கையாளர்களுடன் பேசக் கூடாது என அவர்கள் உத்தரவிட்டுள்ளனர் பங்குச்சந்தையில் பக்காவோர் இப்போது இடம் பெற்றுள்ளதால் ஊடகங்களின் பார்வை பக்காவோர் பக்கம் திரும்பியுள்ளது. 2 சிஸ்டர்ஸ் தொழிற்சாலைகளின் பெயர் கெட்டுப்போனது போல் இங்கேயும் ஆகக்கூடாது என்று அவர்கள் கவலை கொள்கின்றனர். தொழிலாளர்களை பேசவிடாமல் கட்டுப்படுத்துவதை விட்டு விட்டு நம்மை சரியாக நடத்தினால் போதுமே?

**கடந்த வருடம் பக்காவோர் £1.8 பில்லியன் வருமானம் ஈட்டியது. அவர்களால் நமக்கு ஊதியம் அதிகம் கொடுக்க முடியாது என்று அவர்கள் கூறும் போது இதை நினைவு கொள்ளுங்கள்!**

WORKERS WILD WEST

THE UNOFFICIAL

# BAKKAVOR BULLETIN

LATEST NEWS FROM THE FACTORY FLOOR

ISSUE #2 DECEMBER 2017

## நமது வலிமை பிரயோகிக்கலாம்

கிருஸ்துமஸ் பண்டிகை வரவுள்ளது! அசெம்பளி லைனை துரிதப்படுத்துகின்றனர். பல பொருட்கள் தரையில் விழுகின்றன. பாக்ஸ் தயாரிப்பாளர்கள் ஒலிம்பிக் கோல்ட் மெடல் வாங்க உள்ளது போல் வேலை செய்கின்றனர். இன்னும் ஒரு வெங்காய பஜ்ஜியை பார்த்தாலே எனக்கு குமட்டுகிறது!.... ஏஜன்சி தொழிலாளர்கள் மேலும் பலரை இறக்கியுள்ளனர். பலர் சிரிப்பு முகத்துடன் வேலை செய்கின்றனர் - ஆனால் இன்னும் எத்தனை நாளைக்கு?! காண்டின்கள் எப்போதும் நிரம்பியுள்ளன. சிவப்பு தொப்பிகள் வியர்வையை அதிகரிக்கின்றன. சிலர் ஓவர்டைமிற்காக அலைகின்றனர். ஆம்புலன்ஸ் வண்டி உங்களுக்காக வராமல் மட்டும் பார்த்துக் கொள்ளுங்கள்!

வெளிப்படையாகவே பேசலாம் - அவர்கள் நம்மீது திணிக்கும் வேலை பளுவும், மன உளைச்சலும் பணி நிலைமையை இன்னும் மோசமாக்குகின்றன. தொழிலாளர்கள் மத்தியில் சகோதரத்துவம் அதிகரிக்க வேண்டிய நேரமிது!

மற்ற தொழிலாளர்கள் சோம்பேறி, புது ஏஜன்சி பெண் மெதுவாக பணி செய்கிறார், அல்லது சிவப்பு தொப்பிகாரருக்கு கொடுக்கப்படும் அதிக ஊதியம் சரியல்ல என குறை கூறுவது சுலபம். ஆனால் நாம் அனைவரும் ஒரே பிரச்சனையை தான் சந்திக்கிறோம். பிச்சை காசுக்கு பிழிகின்ற வேலை. நமக்கு கொஞ்சம் ஓய்வு தேவை. கவுரவுத்துடனும் மதிப்புடனும் நம்மை மதிக்காத நிறுவனத்திற்கு நாம் ஏன் ஒருவரை ஒருவர் மன உளைச்சலுக்கு ஆளாக்க வேண்டும? நமது அதிகாரத்தை நாம் மீண்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்!

நம்மிடம் வலிமை இருக்கிறது என்பதை நாம் மீண்டும் நினைவூட்ட வேண்டும். நம்மை அவர்கள் சிறுமைப்படுத்த முயற்சிக்கின்றனர். ஒரு சில சிகப்பு தொப்பிக்காரர்களுக்கு மட்டும் அதிகாரம் வழங்குகின்றனர், அவர்களும் நம்மை துன்புறுத்துகின்றனர். இது நிறுவனத்தின் மேலதிகாரிகளாக இருந்தாலும் சரி, அல்லது ஜிஎம்பி தொழிற்சங்கப் பிரதிநிதிகளாக இருந்தாலும் சரி,(ஆம் நாங்கள் உங்களைப் பற்றி தான் கூறுகிறோம் ஷாரோன், சஷி, ஹிதேந்திரா!)

*Continued Overleaf >>*

**நீங்கள் அல்லது உங்களுக்கு தெரிந்தவரை நிர்வாகம் துன்புறுத்துகிறதா? உங்கள் தொழிற்சாலையில் சுகாதாரம் மற்றும் பணியடப் பாதுகாப்பு விதிமுறைகள் மீறப்படுகின்றனவா? ஆய்வு செய்ய வரும் போது மேலாளர்கள் எவ்வாறு அதில் இருந்து தப்ப முற்படுகின்றனர்? இவ்வாறான தகவல்களை நீங்கள் கொடுத்தால், இச்செய்தித்தாள் இன்னும் சிறப்பாக இருக்கும். எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்! எங்களுக்கு எழுதுங்கள். நாங்கள் பத்திரிக்கையை விநியோகிக்கும் போது, எங்களுடன் நீங்கள் பேசலாம். உங்களுக்கு சந்திக்க வேண்டும் என்றால், எப்போது எங்கே என்பதை தெரியப்படுத்துங்கள். உங்களைப் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்ள தேவையில்லை.**

**angryworkersworld@gmail.com**
**07544 338993**

இங்கு யார் உண்மையாக உழைக்கின்றனர் என்பதை நாம் எவ்வாறு நிர்வாகத்திற்கு நினைவூட்டுவது? நமக்கு எவ்வாறு ஓய்வை நாம் ஏற்படுத்திக் கொள்வது?

நாம் ஒன்று செய்யலாம். நிர்வாகத்தின் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை நாம் கடைபிடிக்க ஆரம்பிக்கலாம். விதிமுறைகளை கடைபிடித்தால் அனைத்தும் மெதுவாக செல்லும். நிர்வாகத்திற்கு தெரியும், அதனால் தான் ஆய்வு நடக்கும் போது மட்டுமே அவர்கள் விதிமுறைகளை அமலப்டுத்துகின்றனர். நமக்கு ஓய்வு வேண்டும் என்றால், மன உளைச்சல் குறைய வேண்டும் என்றால், அவர்கள் புறக்கணிக்கச் சொல்லும் விதிமுறைகளை பின்பற்றினாலே போதும். மேலும் தெரியுமா? அவர்களை கூறும் விதிமுறைகளை நாம் பின்பற்றினால் அவர்களால் நம்மை குறை கூற முடியாது!

### 2 சிஸ்டர்ஸ் தொழிற்சாலையில் ஊழல்

சமீபத்தில் செய்திகளில் சுகாதாரமும் பாதுகாப்பும் நிறைய அடிபடுகின்றன. வெஸ்ட் ப்ராம்விச்சில் உள்ள 2 சிஸ்டர்ஸ் சிக்கன் தொழிற்சாலை பக்காவோர் நிறுவனத்திற்கு சிக்கன் சப்ளை செய்கிறது. இங்கு அவர்கள் கறிகளின் காலாவதி நாளை மாற்றுவது, பழைய கறியையும் புதிய கறியையும் கலந்து பாக் செய்வது, தரையில் விழுந்த கறியை அப்படியே உபயோகிப்பது என சுகாதார, பாதுகாப்பு விதிமுறைகள் மீறப்படுவதாக ரகசியமாக எடுக்கப்பட்ட வீடியோ பதிவுகள் வெளியாகின.

ஊடகங்கள் இதைப் பற்றி அறியும் போது தான் அவை ஊழலாகின்றன. ஆனால் தொழிலாளர்களாகிய நமக்கு தெரியும் - இது அன்றாட நிகழ்வென்று, லாபத்தை அதிகரிக்க நிர்வாகங்கள் பல விதிமுறைகளை காவு கொடுக்க தயாராக உள்ளனர். பக்காவோரும் இதற்கு விதிவிலக்கல்ல. உணவுப் பொருட்களை கையாள நாம் கையுறை அணிய வேண்டும் என்பது விதி. ஆனால் பல நேரங்களில் நாம் அதை செய்வதில்லை. ஃபைபர் எக்சிட்கள் முன் பெட்டிகள் அடைபட்டிருக்கின்றன. பாலட்டுகள்(Pallets) நெடுவாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு முறையான பாதுகாப்பு பயிற்சிகளோ சாதனங்களோ கொடுக்கப்படவில்லை (உதாரணமாக போர்க்லிப்டுகள் உள்ள இடத்தில் ரப்பர் காலுறைகள் இல்லை). சில சமயம் குளிர் அதிகரிக்கும் போது, இன்னொரு கோட்டுகளோ, காதடைப்புகளோ அவர்கள் நமக்கு தருவதில்லை. காய்கறிகள் அறையில் காரமான, மஸ்டர்ட் பதார்த்தங்களை செய்யும் போது, நாம் அணியும் கண்ணாடி போதுமானதாக இல்லை. திரும்பத் திரும்ப ஒரே செயலை செய்வதனால் தசைகள் சோர்வடைகின்றன. மழை பெய்யும் போது தொழிற்சாலையில் நீர் வருகிறது. மசாலா அறையில் கொடுக்கப்படும் முகமூடிகள் நமது நுரையீரலை முழுவதும் பாதுகாப்பதில்லை. சமன்படுத்தாத தரைகளில், சரிபடுத்தாத ட்ராலிகளை இன்னும் தள்ள சொல்லி அதிகாரிகள் சத்தம் போடுகின்றனர். ஆனால் தரைகளையோ ட்ராலிகளையோ அவர்கள் சரிபடுத்தமாட்டார்கள். ஏனென்றால் அதற்கு செலவாகும். சென்ற வருடத்தில் கம்பர்லாண்ட் தொழிற்சாலையில் தீப்பிடித்த போது அவர்கள் தீப்படையினரை கூப்பிடவில்லை. மாறாக உள்ளே இருந்த புகையிலேயே நம்மை மீண்டும் பணி செய்ய கோரினார்கள்! நமது பாதுகாப்புக்கு முக்கிய எதிரி உற்பத்தி வேகமே – நாம் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் குறித்து யோசித்து செயல்பட நமக்கு நேரம் போதவில்லை, நாம் எங்கு செல்கின்றோம் என்பதை குறித்து யோசிக்காமலே நாம் ஓடிக் கொண்டிருக்கிறோம...

ஒவ்வொரு நாளும் நாம் சிறிய விபத்துகளில் காயப்பட்டுக் கொண்டிருக்கிறோம், அது நாளாக நாளாக பெரிதாகிறது. முறையான காற்றோட்டம் இல்லாமல் சுத்தப்பணியாளர்கள் பணி செய்கின்றனர். காலப்போக்கில் அது நுரையீரலை பாதிக்கின்றன. பின்களையும் பாத்துகளையும் நாம் தள்ளிக் கொண்டே இருப்பதனால் தசைகள் பாதிப்படைகின்றன. 12 கிலோவிற்கு மேல் நாம் எதையும் தூக்கக் கூடாது என நிர்வாக விதிமுறைகள் கூறினாலும் 25 கிலோ மூட்டைகளை நாம் தூக்குவதனால் முதுகு வலிக்கின்றது. திரும்பத் திரும்ப ஒன்றை

**Continued Overleaf >>**

செய்வதனால் மூட்டு தேய்கின்றது. ஒரு வேலை நமக்கு போதியமான ஊதியத்தை தராததால் நாம் இரண்டு வேலை செய்ய வேண்டியுள்ளது, அதனால் வேலைபளுவினால் எப்போதும் சோர்ந்தே உள்ளோம்.

ஆனால், ஏதாவது பிரச்சனையானால், உடனே அவர்கள் நம்மை தான் குறை கூறுகின்றனர்.

### நாம் என்ன செய்யலாம்?

இது குறித்து தொழிலாளர்கள் முறையிட்டுள்ளனர் ஆனால் எதுவும் நடப்பதில்லை. ஊழல் நடப்பதற்கு முன்னரும் பின்னரும் நடைபெற்ற ஆய்வுகளில் 2 சிஸ்டர்ஸ் தொழிற்சாலை சான்றிதழ் பெற்றது. இம்மாதிரியான ஆய்வுகள் கண்துடைப்பிற்காகவே செய்யப்படுகின்றன என்பது நமக்கு நன்றாக தெரியும். ஆய்வாளர்கள் இருக்கும் வரை விதிகளை பின்பற்ற சொல்வார்கள், அவர்கள் சென்ற பின்னர், எல்லாம் வழக்கம் போலே தான்.

நம்மை பாதுகாத்துக் கொள்ள, நமக்கு கொஞ்சம் நேரம் ஒதுக்கிக் கொள்ள, நம்மிடம் இருக்கும் வலிமையை உபயோகிக்க, நிர்வாகத்தின் விதிகளையே நாம் அவர்களுக்கு எதிராக உபயோகிக்கலாம். உங்கள் முதலாளி உங்களை பாதுகாப்பற்ற முறையில் பணியில் ஈடுபடுத்த அனுமதிக்காதீர்கள். உங்களுக்கு காதடைப்புகளும், புதிய கோட்டுகளும், ஏப்ரன்களும் ஏற்பாடு செய்வதற்காக அசெம்பிளி லைனை நிறுத்த வேண்டும் என்றால் நிறுத்தட்டுமே! பாதுகாப்பு பணி நிலைமை கோரியதற்காக உங்கள் சக தொழிலாளர் மேல் நிர்வாகம் நடவடிக்கை எடுத்தால், அவரை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்!

இவ்வலிமையைக் கொண்டு மேம்பட்ட பணி நிலைமைகளுக்கு நாம் போராடலாம். நமக்கு தெரியும், சில விதிமுறைகளை நாம் சரியாக கடைபிடித்தோம் என்றால் தொழிற்சாலையில் வேலையே நடக்காது. மோசமான சக்கரங்களை கொண்ட ட்ராலிகளையும் பின்களையும் நாம் உற்பத்தியில் ஈடுபடுத்த மறுத்தால், அங்கு வேறு எதுவுமே இருக்காது. சரியான காற்றோட்டம் இல்லாத இடங்களில் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் பணி செய்ய மறுத்தால் தொழிற்சாலை நாறி விடும். பொருட்களை நகர்த்துபவர்கள் பாதுகாப்புடன் நகர்த்தினால், தொழிற்சாலை நின்று விடும்.
முன்னர் கொடுக்கப்பட்டதை விட நமக்கு அதிக ஊதிய உயர்வு வேண்டும் என்றால், லண்டன் வாழ்க்கைக்கேற்ப ஊதியம் வேண்டும் என்றால், £10.20 வேண்டும் என்றால் நாம் ஒன்று சேர வேண்டும். அதற்கு முதல் கட்டமாக மேலாளர் முன் சக தொழிலாளரை திட்டாதீர்கள்! சின்ன சின்ன வழிகளில் அவர்கள் நம்மை துரிதமாக வேலை வாங்குவதை முறியடிப்போம். நம்மை அவர்கள் மதிப்புடன் நடத்த வைப்போம்!

---

## ஊதிய உயர்விற்காக வேண்டாதீர்கள், கோருங்கள்.

ஊதிய உயர்வை குறித்து இன்னும் தொழிலாளர்கள் கோபத்தில் தான் உள்ளனர், ஏனென்றால் அவருக்கு 15p தான் உயர்வு கிடைத்தது. மனிதவள துறைக்கு பலர் தனியாகவும் குழுக்களாகவும் புகார் அளித்துள்ளனர். ஆனால் எதுவும் மாறவில்லை.

தொழிற்சாலையில் திறன் மிகுந்த பணி கிடைத்தால் நல்ல ஊதியம் கிடைக்கும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இம்மாதிரியான வேலைகளும் நல்ல ஊதியத்தை தருவதில்லை, அனைவரும் சிவப்பு தொப்பியாக முடியாது. மாறாக அனைவருக்கும் குறைந்தது லண்டன் வாழ்க்கைக்கான ஊதியம் பெற முடியும்.

பேசுவது மட்டும் போதாது, செயலிலும் நாம் இறங்க வேண்டும். நம்முடைய வேலைக்கான பணிகளை மட்டும் நாம் செய்ய வேண்டும் மற்ற பணிகளை நாம் செய்ய வேண்டியதில்லை.

**Continued Overleaf >>**